Women's Special Buses.

*14 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that Women's Special Buses are run in the City only during the peak hours both in the morning and evening on week days (Monday to Friday) only; and

(*b*) if so, whether there is any proposal to run such buses throughout the day and on holidays also?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) பொது விடுமுறை நாட்கள் தவிர்த்த மற்ற எல்லா நாட்களிலும் காலையிலும் மாலையிலும் நெரிசல் நேரங்களில் மகளிருக்கான தனிப்பேருந்துகள் சென்னை மாநகரில் செலுத்தப் படுகின்றன.

(இ) இல்லை.

DR. H. V. HANDE : Obviously the problem is one of peak-over traffic. Will the Hon. Minister tell us what are the further steps he is going to take to relieve the peak-hour traffic ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், இப்பொழுது நெரிசல் நேரங்களில் ஏற்படும் கஷ்டங்கள் தவிர்க்கப் படவேண்டும் என்று, அரசு கூடுதலான பஸ்கள் விடுவதற்கும், இன்னொரு கண்டக்டரைப் போடுவதற்கும் ஆலோசனை செய்கிறது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, சென்னையிலே நெரிசல் தவிர்க்கப்படவென்று மாதர்களுக்கு தனிப் பஸ்கள் விடுவதுபோல, பெண்கள் கல்லூரிகள் உள்ள மதுரை, திருச்சி, கோவை போன்ற நகரங்களிலும் தனி பஸ்கள் விட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அங்கெல்லாம் தனியார் பஸ்கள் ஓடுகின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, இந்திய அரசியல் சட்டப்படி, ஆண்களும், பெண்களும் சமம் என்ற நிலையில், பெண்களைத் தனியாகப் பிரித்து பஸ்களில் வேறு படுத்துவது பொருத்தமாகாது என்று முற்போக்கான மாதர்கள் எழுதிவருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆண்களும், பெண்களும் சமம் என்றாலும், பஸ்களைப் பொருத்தவரையில், சமம் என்பதில் சமர் ஏற்படுவதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (சிரிப்பு).

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, பெண்களுக்காக விடப்படும் பஸ்களில் பெண் கண்டக்டர்கள் போடப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1971 ஜூன் 31]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, there is no such proposal.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, it will help us and it would be preferable if such buses were run especially for women on holidays in the mornings. Will the Government consider the request?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுதே நெரிசல் நேரங்களில் விடப்படும் பஸ்கள் திரும்பி வரும்போது, போதிய பெண் பிரயாணிகள் இருப்பதில்லை. ஆகையினால் நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, விடுமுறை நாட்களிலும் விஸ்தரிப்பது என்பதற்கான பிரச்சனை எழவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, விடுமுறை நாட்களிலாவது, அலுவலக நேரத்தில் விடுவது போல், கூட்டம் அதிகமாக வருகிற நேரத்தில் அதிகமாக பஸ்கள் விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படிப்பட்ட வசதி இப்போது நடைமுறையில் இருக்கிறது.

Periyar Power Unit.

* 15. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether a settlement has been arrived at between Tamil Nadu and Kerala State regarding the Periyar Power Unit; and

(b) if so, the details thereof and the date on which the agreement has been signed?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :

(அ) ஆம்.

(இ) ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி பெரியாற்றின் நீரைப் பயன்படுத்தி நீர் மின்சக்தி உற்பத்தி செய்யவும், இது காரியத்துக்காகத் தேவைப்படும் எல்லாப் பொறிகளையும் நிறுவுவதற்குமான உரிமை தமிழ்நாடு அரசுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இம்மாநிலத்தினால் மின் சக்தி உற்பத்திக்காகப் பெரியாற்று நீரைப் பயன்படுத்துவதற்கான உரிமைத் தொகையை (1) 350 மில்லியன் யூனிட்டுகள் வரை உற்பத்தி செய்யப்படும் மின்சக்திக்கு கிலோ வாட் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12 என்ற விதத்திலும் (2) 350 மில்லியன் யூனிட்டுகளுக்கு மேலாக உற்பத்தி செய்யப்படும் மின் சக்திக்கு கிலோவாட் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 18 என்ற வீதத்திலும், கேரள அரசு பெறும்.

பெரியாறு நீர்மின்சக்தித் திட்டம் குறித்து தமிழ்நாடு—கேரள மாநிலங்களுக்கிடையே 1970-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி அன்று ஒப்பந்தம் கையெழுத்தாகியது.